# Ceremonies and Rituals of the Kaani Tribe

**G. Aswathypooja**
*Register No- 22213154022020, Full Time Research Scholar*
*Department of Tamil, S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. N. Nisha Navis**
*Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniyam Sundaranar University, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255883

**Abstract**

*Aboriginal people are a kind of people living in the foothills of the Western Ghats. They live in Kumari district in Pachiparai and hill villages. Festivals and rituals express their cultural feelings in the lives of these people. During the festivals, the song, the song and the traditional musical instruments are welcomed. Onam Festival plays an important role in the festivals of the land King Travancore Marthanda Verma gave the land to the people of the hill country who protected him as she sought refuge in the forest during the war. Because of this, the king of Malayalam celebrates the Onam Festival, which is commemorated at their festivals. Farming and nature worship the Lord in order to worship the Lord. In order to welcome the full moon of the Karthika Pongal Festival, they celebrate the glory and celebrate the white moon. The tradition of celebrating the mountain deities such as Pachiyamman and Shasta. In the name of transforming the wedding bond, they are celebrating the ceremony. Thus the article is written about the ceremonies celebrated with the reasons of the landlords*

***Keywords:*** *Moottukaani, Pilaathi, Vilikaani, Uruvumaarithal, Kokkare*

**References**

1. Dr. V. Chithamparanatha Pillai, Thamizhagaka anikkaararkalin Naadupurapaadalkal, Tamil University, Thanjavur.
2. Bhaktavatsala Barathi, Thamizhagapazhankudikal.
3. Tarmaraj. Y. Kaanikkaara Pazhangudi Makkalin Vaazhviyal,
4. Steph en.G.1 997 (kokkare), Kaanikkaarar Vaazhvum Panpaadum, Thinaiveliyeeddagam.
5. Sangam Literature (Edduththogai-Paththuppaaddu), New Century Published.
6. Information - Lakshmi, Thachamala, pechipparai.
7. Information - Parvati, Thachamala, Pechipparai.
8. Information - Vijayamma, Koruvakkuzhi, Pechipparai.

# குமரிவாழ் காணிக்காரர்களின் விழாக்களும் சடங்குகளும்

***கௌ. அஸ்வதிபூஜா***
பதிவு எண்- 22213154022020, முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் நே. நிஷாநேவிஸ்***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்***
*மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வாழும் ஒருவகை இனத்தைச் சார்ந்தவர்கள் தான் பழங்குடிக் காணிக்காரர்கள். இவர்கள் குமரி மாவட்டம் பேச்சிப்பாறை, மலை கிராமங்களில் வசித்து வருகின்றனர். இவ்வின மக்களின் வாழ்வில் திருவிழாக்களும் சடங்குகளும் அவர்களின் கலாச்சார உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. விழாக்களின் போது ஆடல், பாடல், பாரம்பரிய இசை கருவிகள் இசைக்க விழாக்களை வரவேற்கின்றனர். காணி மக்களின் விழாக்களில் ஓணம் விழா மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மா போர்க்காலங்களில் காடுகளில் தஞ்சம் புகுந்ததால் அவரை பாதுகாத்த மலைவாழ் மக்களுக்கு நிலங்களை செப்பு பட்டயத்தில் தந்தார். இதன் காரணமாகவே மலையாள மன்னன் மாவேலியை தங்களின் விழாக்களில் நினைவு கூறும் ஓணம் விழாவினை கொண்டாடுகின்றனர். கார்த்திகைக் கொடுதியினை விழாவாக எடுக்கின்றனர்.விவசாயமும், இயற்கையும் வழிபடும் பொருட்டு படையல் இட்டு இறைவனை வணங்குகின்றனர். கார்த்திகை பொங்கல் விழாவினை முழு நிலாவை வரவேற்கும் பொருட்டு குருத்தோலை தோரணம் கட்டி, வெண்பொங்கல் இட்டு கொண்டாடுகின்றனர். பேச்சியம்மன், சாஸ்தா போன்ற மலைவாழ் தெய்வங்களையும் கொண்டாடும் பாரம்பரியம் காணப்படுகிறது. திருமண பந்தத்தினை உருமாறுதல் என்ற பெயரில் இவர்கள் விழாவாக கடைப்பிடிக்கின்றனர். இவ்வாறு காணிக்காரர்களின் காரண காரியங்களைக் கொண்டு கொண்டாடப்படும் விழாக்கள் பற்றி கட்டுரையில் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *மூட்டுக்காணி, பிலாத்தி, விளிக்காணி, உருவுமாறுதல், கொக்கரே.*

**முன்னுரை**

பழங்குடி காணிகாரர்களின் திருவிழாக்களும், சடங்குகளும் இனம் சார்ந்தவையாகவும், வழிபாட்டு காரணங்களின் அடிப்படையிலும் கொண்டாடப்படுகிறது. குமரி வாழ் காணி மக்களிடம் இன்றளவும் காணப்படும் விழாக்கள் பழமையான கலாச்சாரத்தினை எடுத்துரைக்கின்றது. மலையாள மலைவாழ் மக்களின் சாயல் காணப்படுவதால் பேசும் மொழியிலும் மாறுபாடுகள் காணப்படுகிறது. அதனால் விழாக்களின் போது பாடும் பாடல்களிலும் மலையாளம் மற்றும் தமிழ் சொற்கள் கலந்து காணப்படுகிறது. விழாக்களிலும் சடங்குகளிலும் உள்ள பாரம்பரியத்தை இவ்வாய்வு கட்டுரையில் காணலாம்.

**காணிக்காரர்கள்**

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வசிக்கக் கூடிய பழங்குடியினத்தைச் சார்ந்த மக்களே காணிக்கார்கள். காணி என்பதற்கு நில உடமையாளர்கள் என்று பொருள். கருமை

நிறமும், சுருண்ட முடியும், குறைந்த உயரமும் கொண்டே காணிக்காரர்களின் தோற்றம் காணப்படுகிறது. இவ்வின மக்க ளுக்கென்று சில பண்பாடும் பாரம்பரியமும் இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**காணி மக்களின் விழாக்களும் சடங்குகளும் உருவாகிய விதம்**

காட்டில் இயற்கை எழிலுடன் வசித்து வரும் காணிக்காரர்கள் எறும்பு, தும்பி, பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி போன்றவற்றின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்துக் கற்ற வித்தைகளை கலையாக, சடங்காக பின்பற்றியுள்ளனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடைபெறும் பல உள் தொடர்பான மரபு வழி நிகழ்வுகள் சடங்குகள் என்று குறிப்பிடப்படுகின்றன. சடங்குகள் ஒன்றிணைக்கப்பட்டக் கட்டுத் தொகுதியினை விழா என்று வழங்குகின்றனர்" *(யோ. தர்மராஜ் ப.76)* மேற்குத் தொடர்ச்சி மலையை காடுகளில் வசிக்கும் காணிப் பழங்குடி மக்களின் பழக்கவழக்கங்கள் தனித்துவமிக்கது. பிறப்பு முதல் இறப்பு வரை பாடல், நடனங்கள் நிறைந்தது. காணிச் சமூகத்தில் முதுமை பருவத்தை அடைந்தவர்களை மூட்டுக்காணி என்கின்றனர். இவர் காணிக்காரர்களின் தலைமை பதவிக்கு உரியவராவர். பிலாத்தி என்பவர் நோய்களை தீர்க்கும் மருத்துவராகவும், குணப்படுத்த முடியாத தீராத நோய்களை தீர்க்கும் மந்திரவாதியாகவும், பூசாரியாகவும் செயல்படுகின்றார். விளிகாணி என்பவரை மூட்டுக்காணி இடும் கட்டளைகளையும், செய்திகளையும் காணியின மக்களிடம் கொண்டு சேர்க்கின்றவராக விளிகாணி செயல்படுகின்றார். மூட்டுக்காணி விளிகாணி, பிலாத்தி மூவர்களே காணிச் சமூகத் தினரிடையே நிகழும் விழாக்கள் மற்றும் சடங்குகள் போன்ற எல்லா நிகழ்வுகளுக்கும் தலைமை தாங்குகின்றனர்.

**ஓணம் விழா**

திருவிழாக்கள் என்பது ஒரு கலாச்சாரத்தின் மரபு மற்றும் இனம் சார்ந்த நெறிகளைக் கொண்டாடுவதா கும். அவ்வாறு மேற்குத் தொடர்ச்சி மலை காணிப்பழங்குடியினரால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் விழாக்களில் ஒன்று ஓணம் திருவிழாவாகும். வாமன மூர்த்தியின் அருளால் வரம் பெற மாவேலி மன்னன் வந்து காணும் திருநாளை ஓணம் பண்டிகை. "மாயோன் மேய ஓண நல் நாள்" *(மதுரை-591)* என்னும் பாடலில் மாயோனாகிய திருமாலின் நாள் திருவோண நட்சத்திரம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஓணம் விழாவின் போது காணியின பெண்கள் சோணம் துள்ளல், தும்பி துள்ளல் போன்ற நடன கலைகளை நிகழ்த்துகின்றனர். சோணம் துள்ளல் விழா காலங்களில் இரவில் பெண்கள் கூடி பாடுவர். அதில் ஒரு பெண்ணின் உடலில் சோணன் இறங்கி துள்ளும் என நம்புகின்றனர். சோணன் என்பது காட்டில் வாழும் ஒரு வகை எறும்பு என்று கூறுகின்றனர். அந்த எறும்பு ஊர்வது போல துள்ளல் நடனம் ஆடுவார் காணி இனப்பெண்கள்.

**படப்பிலிரிக்குந்ந சோணன்**
**கள்ள சோணன்**
**படப்பிலிரிக்குந்ந சோண்ன்**
**கள்ள சோணன்**

**(தகவலாளி-லட்சுமி,தச்சமலை, பேச்சிப்பாறை,கன்னியாகுமரி)**

ஓணம் விழாவின்போது தும்பி துள்ளல் என்ற நிகழ்வானது காணி மக்களிடம் அரங்கேறுகிறது.

**ஏ! கொச்சித்தும்பி**
**நின்னே சாரீரத்தில சாயமடிச்சது ஆரான**
**சொல்லு தும்பி சொல்லு தும்பி**
**இல்லா....இல்லா.... நான்**
**சோதிச்சு சண்டைக்கு வாரேன்**
**நின்ற ரீங்கார சத்தம் கேட்டு**
**நான் சொக்கி போனெ**

**உனக்கு களிக்க கவர்ச்சி தரலாம்**
**பறக்க விட பட்டம் தராம்**
***(முனைவர் வே. சிதம்பரநாதபிள்ளை)***
***பக் -96***

பொதுவாகவே குமரிவாழ் காணிக்காரர்களின் பேச்சு மொழியில் மலையாளம் கலந்திருப்பதை காண முடிகிறது. மேற்கண்ட பாடலுமே மலையாளமும் தமிழும் கலந்த மொழியிலே தும்பி துள்ளல் பாடல் அமைந்திருக்கின்றது. இவ்வாறு பலப் பாடல்களை ஓணம் பண்டிகையின் போது பாடி ஆடுகின்றனர்.

### கார்த்திகைக் கொடுதி

காணிக்காரர்கள் வருடத்திற்கு ஒருமுறை கார்த்திகை கொடுதி என்ற விழாவினை கொண்டாடுகின்றனர். அந்தி வேளை தொடங்கி அதிகாலை வரை மலைகளில் வசிப்பதாக நம்பப்படும் 108 தெய்வங்களை கார்த்திகைக் கொடுதியின் போது கொடு திச்சாற்றுப் பாடி அழைக்கின்றனர். செய்யும் தெய்வங்களுக்கு நன்றி செலுத்துவதை படையல், பொங்காலை, ஊட்டு, கொடை என்றெல்லாம் அழைக்கின்றனர். கொடுக்கப் படுவதால் கொடுதி ஆயிற்று என்பர். காணிக்காரர்களிடையே தெய்வங்களுக்குக் கொடுதி கொடுக்கின்ற வழக்கம் தொழில் சார்ந்த நிலையிலும், சடங்கு சார்ந்த நிலையிலும் அமைகிறது. (வே. சிதம்பரநாத பிள்ளை, ப.17) கார்த்திகை கொடுதியின் போது பொங்கல் இட்டு, இயற்கையில் காட்டில் விளைந்த பழங்களை தெய்வங்களுக்கு படைக்கின்றனர். கார்த்திகை கொடுதியின் போது கொடுதிச் சாற்றினை கொக்கரெ என்ற இசைக்கருவியை இசைத்து பாடுகின்றனர்.

**பெற்றப்பன் திருமுன்னே குஞ்சிலி பிடிச்சு வாடா**
**மாயராயி நீக்குவானு கச்சிலியால ஆவற**
**காலராயி நீக்குவானும் கச்சிலியால ஆவற**
***(காளியின் காணி)***

இப்பாடல் ஆனது கொக்கரெ இசைக்கருவி இசைக்க காணி மக்களால் பாடப்படும் பாடல் ஆகும். நோய் நீங்குவதற்கும் கொக்கரெ இசை முழங்க பாடல் பாடுகின்றனர்.

கார்த்திகைக் கொடுதி வேளாண்மை செய்ய, எவ்வித தடை இல்லாமல் இருக்க கடவுளுக்கு செய்யும் சடங்காகும்.

### பேச்சியம்மன் திருவிழா

பேச்சுப்பாறை மலை கிராமங்களில் வசிக்கும் காணி மக்களின் முக்கிய விழாக்களில் ஒன்று பேச்சியம்மன் திருவிழா பேச்சியம்மன் பற்றிய தொன்மை கதை ஒன்று இவர்கள் கூறுகின்றனர். பேச்சுப்பாறை அணைக் கட்டுமானம் அடிக்கடி இடிந்து விழுந்தது அதற்கு காரணம் மலைவாழ் தெய்வம் என்று பணியாளர்கள் நம்பினார்கள். எனவே, மலைவாழ் தெய்வத்திற்கு பலி கொடுத்தால் பணியை தொடர முடியும் என நம்பி ஒரு பெண்ணை நரபலி கொடுத்தனர் அவ்வாறு பலி கொடுக்கப்பட்ட பெண்ணை காணி மக்கள் பேச்சியம்மன் என்று பெயரிட்டு வழிபட்டனர் என்று வாய்மொழி கதை ஒன்று கூறுகின்றனர். (தகவலாளி-பார்வதி தச்சைமலை) இக்கோவில் திருவிழா மாசி மாதம் பரணி நட்சத்திரம் கொண்டாடப்படுகிறது. பத்து நாள் விழா நடைபெறும். முதல் நாள் விழாவினை காணி மக்களின் வசிப்பிடத்திலிருந்து கொடி மரமும், கொடிக்கயிறும் பேச்சி அம்மன் சன்னதியில் கொண்டு வருகின்றனர். அதன் பின் அன்றைய தினம் காணிக்காரர்களின் சாற்று பாடலும் நடைபெறுவதாக கூறுகின்றனர்.

**பொண்ணு போற்றி தெய்வமே**
**பொண்ணு போற்றி மாதாவே**
**நம்மளு காணிக்கையாட்டிட்ட**
**பொருளின பெரிதாயிட்டு பற்றனுமே**
***(மல்லன் காணி தமிழககாணிக்காரப் பழங்குடியினரின் நாட்டுப் புறப்பாடல்கள்)பக் -82***

காணிக்காரர்கள் தெய்வத்திற்கு இடும் படையலை ஏற்றுக் கொள்ளும்படி பாடப் படும் சாற்றுப்பாட்டாகும்.

**சாஸ்தா திருவிழா**

காணி மலையுறை தெய்வமாக சாஸ்தா காணப்படுகிறது. பேச்சுப்பாறை கிராமத்தில், உரப்பாறை பகுதியில் காணப்படும் தர்மசாஸ்தா திருக்கோயில் திருவிழாவானது காணியின மக்களால் கொண்டாடப்படுகிறது. இக்கோயில் திருவிழா ஐந்து நாள் விழாவாக கொண்டாடப்படுகிறது. விழாவின் ஒரு நாள் இரவு காணிக்காரர்களின் சாற்றுப் பாட்டு இடம்பெறுகிறது. இரவு தொடங்கி மறுநாள் காலை வரை சாற்று பாடப்படுகிறது. இக்கோயிலின் வழிபாடுகளும் சடங்குகளையும் காணிக்காரர்கள் தான் எடுத்து நடத்துகின்றனர். ஐய்யப்ப கடவுளையே சாஸ்தா என்று அழைக்கின்றனர் என வே.சிதம்பரநாத பிள்ளை தமிழக காணிக்காரப் பழங்குடியினரின் நாட்டுப்புறப் பாடல்கள் என்ற நூலில் காணிக்காரர்களின் மதமும், வழிபாடும் பற்றி குறிப்பிட்டுள்ளார். திருவிழாவில் காணியின பெண்களின் நடனக் கலைகள், பாடல்கள் போன்றவை இடம்பெறுகின்றன.

**கார்த்திகைப் பொங்கல் விழா**

விவசாயிகள் தை திருநாளை பொங்கல் திருநாளாகக் கொண்டாடுகின்றனர். அதேபோன்று காணிக்காரர்கள் கார்த்திகை முதல் நாளை பொங்கல் விழாவாக கொண்டாடுகின்றனர். இந்த நன்னாளில் வன தெய்வங்களுக்கும் சூரிய பகவானுக்கும் வெண்பொங்கல் இட்டு கொண்டாடுகின்றனர். காணிக்காரர்கள் காடுகளை விருச்சிகத்தில் (நவம்பர்- டிசம்பர்) வெட்டத் தொடங்குகின்றனர். இது தனு-வில் (டிசம்பர்- ஜனவரி) முடியும். கும்பத்தில் (பிப்ரவரி- மார்ச்) வெட்டியப் புதர்களை எரிப்பார்கள். மீனத்தில் (மார்ச் - ஏப்ரல்) 'தொட்டகாம்பு' மூலம் கொத்தி விட்டு பின் விதைப்பார்கள். இருமுறை களை எடுத்தபின், சிங்கத்தில் (ஆகஸ்ட்- செப்டம்பர்) அறுவடை செய்வார்கள் (பக் -2) என்று தமிழக பழங்குடிகள் என்ற நூலில் பக்தவச்சல பாரதி குறிப்பிட்டுள்ளார். விவசாயம் செழிக்க உதவும் சூரியன், இயற்கையையும் வணங்கும் நாளாக கார்த்திகைப் பொங்கல் இன்றும் காணிக்காரர்களால் கொண்டாடப்படுகிறது. குருத்தோலை தோரணங்கள் கட்டியும், தீப்பந்தங்கள் கொழுத்தியும் இந்த கார்த்திகைப் பொங்கலை கொண்டாடப்படுகின்றனர். தேன், தினை, இளநீர், வெண்பொங்கல் படைத்து வழிபடுவர். எந்த வேலை இருந்தாலும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெய்வங்களை வழிபட தவற மாட்டார்கள்.

**குறுமுயல் மறு நிறம் கிளற மதி நிறைந்து**
**அறுமீன் சேரம் அகல் இருள் நடு நாள்**
**மறுகு விள்க குறுத்து மாலை தூக்கிய**
**பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய**
**விழவு உடன் அயிர வரும் கதில் அம்ம**

**(அகம்-141:5-11)**

இப்பாடலில் பழந்தமிழர் வானில் குறிப்பிட்ட மாதத்தில் முழு நிலவு தெரியும் நாள் அன்று கார்த்திகை விழா கொண்டாடினர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கார்த்திகை பொங்கல் இன்றும் காணிக்காரர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

**உருவு மாறுதல் விழா**

காணியின மக்கள் திருமணத்திற்கு., பண்டைய காலத்தில் உருவு மாறுதல் என்று அழைத்திருக்கின்றனர். திருமணங்கள் பெரும்பாலும் பெண் வீட்டில் வைத்தே நடத்திருக்கின்றது. 1960 களுக்கு முன்பு நடைபெற்ற திருமணங்களில் மணப்பெண் இடுப்பில் வேட்டியை கட்டிக்கொண்டும், மேலாடை அணியாமல் தலையில் துண்டு போட்டும், மணமகன் இடையாடை (கோவணம்) உடுத்தியும், கதர்த்துண்டை போர்த்தியும் திருமணத்திற்கு

தயாராகுவார்கள் என்று கூறுகின்றனர். நாள், கிழமை அக்காலத்தில் காணி மக்கள் திருமணத்திற்காக கணக்கிடப்படவில்லை என்று கூறுகின்றனர். மூட்டுக்காணி திருமணத்தை நடத்தி வைக்கின்றார். மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் தாலியினைக் கட்டிய பிறகு விருந்து நடைபெறுகிறது.

(வே. சிதம்பரநாதப்பிள்ளை) பக் -15

இவ்வாறு திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு மூட்டுக் காணியின் தலைமையில் தான் நடைபெற்றுள்ளது. இன்றைய காலத்தில் திருமண சடங்குகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போது திருமணம் கோலாகலமாக மண்டபங்களில் வைத்து விழா எடுத்துக் கொண்டாடுகின்றனர்.

## தொகுப்புரை

காணியின மக்கள் வாழ்வில் பாரம்பரிய விழாக்களும், சடங்குகளும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இயற்கையை வழிபடுவதும், விழாக்களில் இடம்பெறும் சடங்குகள் பற்றியும் இக்கட்டுரையில் எடுத்து ரைக்கப்பட்டுள்ளது. ஓணம் திருவிழா, கார்த்திகைக்கொடுதி, உருவுமாறுதல் விழா, கார்த்திகைப் பொங்கல் விழா, பேச்சியம்மன் திருவிழா, சாஸ்தா திருவிழா போன்ற விழாக்கள் குமரிவாழ் காணிக்காரர்களின் கொண்டாட்டங்களில் முக்கிய இடம் வகிக்கின்றது. பழமை மாறாத கலாச்சார விழாக்களும், சடங்குகளும் இன்றளவும் விந்தையாகவே காணப்படுகிறது. காலமாற்றத்தின் போதும், வளர்ச்சிகள் அடைந்த போதிலும் வழிபாடுகளும், சடங்குகளும் மாற்றம் அடையாமல் இருக்கின்றதை இவ்வாய்வின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

## துணைநூற்பட்டியல்


1. முனைவர் வே. சிதம்பரநாத பிள்ளை, தமிழககாணிக்காரப் பழங்குடியினரின் நாட்டுப் புறப்பாடல்கள், தமிழ் பல்கலைக் கழகம் மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.
2. பக்தவத்சல பாரதி, தமிழக பழங்குடிகள்.
3. தர்மராஜ். யோகாணிக்காராப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல், ஆய்வேடு.
4. ஸ்டீபன். ஞா 1997 (கொக்கரெ) காணிகாரர்கள் வாழ்வும் பண்பாடும், திணை வெளியீட்டகம்.
5. சங்க இலக்கியம், (எட்டுத் தொகை-பத்துப் பாட்டு) நியூசெஞ்சுரி பதிப்பகம்.
6. தகவலாளி - லட்சுமி, தச்சமலை
7. தகவலாளி - பார்வதி, தச்சைமலை.
8. தகவலாளி - விஜயம்மா, கோருவக்குழி.